## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – கல்வி – பொதுப்பரிசுகள் – அறிஞர் அண்ணா விருது மற்றும் தந்தைப் பெரியார் விருதுத் தொகையினை உயர்த்தி வழங்க அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந2) துறை**

அரசாணை(நிலை)எண்.98 நாள்.06.08.2012

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 56, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள்.26.5.2008.
2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.பி2/1704/12, நாள் 11.5.2012.

-----

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட அரசாணையின்படி, மாவட்ட, மாநில அளவிலான பொதுப் பரிசுகள், தந்தை பெரியார் நினைவு விருது மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவு விருது திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட பரிசுத் தொகை ரூ.5,000/–மாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் 9.5.2012 அன்று நடைபெற்ற 2012–13 ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மானிய கோரிக்கையின்போது பொதுப்பரிசுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே மாவட்ட அளவில் 10 ஆம் வகுப்பில் உயர் மதிப்பெண்கள் பெற்று தொழில்நுட்ப கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் தந்தை பெரியார் விருதுத் தொகையினையும், அதே போல் 12 ஆம் வகுப்பில் உயர் மதிப்பெண்கள் பெற்று தொழிற்கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பேரறிஞர் அண்ணா விருதுத் தொகையும் ரூ.5000/–லிருந்து ரூ.10000/–ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

3. மேலும் மேலே படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட மாநில/மாவட்ட பொதுப் பரிசுகள் முறையே 2010–11 ஆம் ஆண்டு மற்றும் 2012–13 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்ட போதிலும், தந்தை பெரியார் நினைவு விருது மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவு விருது திட்டங்களிலும் பரிசுத் தொகையாக ரூ.5000/– ஆகவே தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இத்தொகையை ரூ.5,000/–லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தி வழங்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று, 2012–13 நிதியாண்டு முதல் அரசு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் 10 ஆம் வகுப்பில் உயர் மதிப்பெண்கள் பெற்று தொழில்நுட்ப கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் தந்தை பெரியார் விருதுத் தொகையினையும், அதே போல் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் உயர் மதிப்பெண்கள் பெற்று தொழிற்கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பேரறிஞர் அண்ணா விருதுத் தொகையும் ரூ.5000/–லிருந்து ரூ.10000/– ஆக (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) உயர்த்தி வழங்கியும் இதற்கான கூடுதல் செலவினமாக ரூ.89,60,000/– (ரூபாய் எண்பத்து ஒன்பது இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

<u>தந்தை பெரியார் நினைவு விருது</u>

<u>பிற்படுத்தப்பட்டோர் நலன்</u>

"2225–ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –277 கல்வி –I திட்டத்தில் சேராதது – BP – சிறந்த மாணவர்களுக்கு தந்தைப் பெரியார் நினைவுப் பரிசு வழங்குதல் – 59–பரிசுகளும், வெகுமதிகளும்"

(து.தொ.கு 2225 03 277 BP 5903) ––––––––––ரூ.19.20 இலட்சம்

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நலன்</u> (ரூ.19.20 இலட்சம்)

"2225– ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –277 கல்வி –I திட்டத்தில் சேராதது – BT – சிறந்த மாணவர்களுக்கு தந்தைப் பெரியார் நினைவுப் பரிசு வழங்குதல் – 59–பரிசுகளும், வெகுமதிகளும்"

(து.தொ.கு 2225 03 277 BT 5905) ––––––––––ரூ.19.20 இலட்சம்

<u>பேரறிஞர் அண்ணா நினைவு விருது</u>

<u>பிற்படுத்தப்பட்டோர் நலன்</u>

"2225– ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –277 கல்வி –II மாநிலத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – JL – சிறந்த மாணவர்களுக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்குதல் – 59 –பரிசுகளும், வெகுமதிகளும்"

(து.தொ.கு 2225 03 277 JL 5903) ––––––––––ரூ.25.60 இலட்சம்

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நலன்</u>

"2225– ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –277 கல்வி –II மாநிலத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – KZ – மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்த அறிவுத்திறன் மிக்க மாணவர்களுக்கு பேரறிஞர் அண்ணா நினைவு விருதுகள் 59 – பரிசுகளும், வெகுமதிகளும்''

(து.தொ.கு 2225 03 277 KZ 5903) ––––––––––ரூ.25.60 இலட்சம்

**ஆக கூடுதல் –––––––––– ரூ.89.60 இலட்சம்**

6. இது ஒரு புது துணைப் பணி குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்ட பேரவையின் ஒப்புதல் கிடைக்கும் வரையில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வ.செ.பொது–I)த் துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகையை முன்பணமாக வாங்குவதற்கு விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் நிதி(வ.செ.பொது–I)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு பிற்படுத்தப்பட்ட நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை துணை மான்ய கோரிக்கையில் சேர்ந்திட உரிய விளக்க குறிப்பினை உரிய தருணத்தில் அரசுக்கு அனுப்பி வைக்கவும். 2012–13 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்திற்கான முன்மொழிவுகள் நிதித்துறைக்கு அனுப்பும்போது இத்தொகையினையும் சேர்த்து அனுப்புமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அதன் அ.சா.எண்.17/ நிதி/ADS/2012, நாள்.2.8.2012 –ன்படி மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.849 (எண்ணூற்று நாற்பத்தொன்பது) வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தங்க கலியபெருமாள்,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை–5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை – 5.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
மாநில கணக்காயர் (தணிக்கை I), சென்னை –6.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை –5.

<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதித்(பிமிபி/வ.செ.பொது–I /வ.செ.பொது–II)துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்